வடமாகாண கல்வி திணைக்களம்

கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) முன்னோடிப் பரீட்சை 2017

**இஸ்லாம் I,II** | **மூன்று மணித்தியாலம்**

Islam **I,II** | Three Hours

**இஸ்லாம் பகுதி - I**

**கவனிக்க :**

(I) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

(II) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

(III) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.**

(IV) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

01. இஸ்லாத்தின் நம்பிக்கைகளைத் தொகுத்துத் தருவதற்காக தோற்றம் பெற்ற கலை எது?
1) இல்முல் கலாம் 2) இல்முல் மீராஸ்
3) இல்முல் அகீதா 4) உலூமுல் குர்ஆன்

02. அல்குர்ஆன் குறிப்பிடும் ஸுஹுபுகள் வழங்கப்பட்ட நபிமார்கள் இருவர்
1) ஆதம் (அலை), மூஸா(அலை) 2) இப்றாஹீம்(அலை) மூஸா (அலை)
3) முஹம்மத் (ஸல்), தாவூத் (அலை) 4) ஈஸா (அலை), இத்ரீஸ்(அலை)

03. நம்பிக்கை சார்ந்த குப்ரில் அடங்குவது
1) அல்லாஹ்வைத் தூற்றுதல்
2) இழிவுபடுத்தும் நோக்கில் அல்குர் ஆனைக் கிழித்தல்
3) மார்க்கக் கடமைகளைப் பரிகசித்தல்
4) சுவனம் நரகம் என்பவற்றை நம்பாதிருத்தல்

04. நபி(ஸல்) அவர்களது காலத்தில் நபித்துவத்துக்கு உரிமை கோரியவர்
1) அஸ்வத் அன்ஸி 2) ஸஜாஹ்
3) முஸைலமதுல் கஸ்ஸாப் 4) அபூலு.்.லுஆ

05. கழா கத்ரை ஏழனப்படுத்தியதற்காக முப்பது கசையடிகள் வழங்கிய கலீபா யார்?
1) அபூபக்கர் (ரழி) 2) உமர் (ரழி) 3) உஸ்மான் (ரழி) 4) அலி (ரழி)

06. ஒரு மு.்.மினுக்கும் காபிருக்கும் இடையில் வேறுபடுத்தி காட்டும் பிரதான அமல் என ஹதீஸ் குறிப்பிடுவது
1) அஸ்ஸகாத் 2) அஸ்ஸலாத் 3) அல்ஹாஜ் 4) அஸ்ஸவ்ம்

07. ஆற்றுநீர், ஊற்றுநீர் என்பன நீரின் வகையில் எப்பிரிவைச் சார்ந்தது
1) அல்மாஉன் தாஹிர் 2) அலமாஉன் முஸ்த.்.மல்
3) அல்மாஉன் முதனஜ்ஜிஸ் 4) அல்மாஉன் தஹூர்

08. உலகில் பூமியை வளப்படுத்தும் பணி அழைக்கப்படுவது
1) கிலாபத் 2) இபாதத் 3) கராமத் 4) இமாரத்

09. உடலோடும், செயலோடும் தொடர்புடைய இபாதத்தாக கணிக்கப்படுவது
1) நோன்பு, ஹஜ் 2) ஸகாத், ஸதகா
3) திக்ர், தஸ்பீஹ் 4) இக்லாஸ், பொறுமை

10. ஒரு முஸ்லிமிடம் காணப்பட வேண்டிய நற்பண்புகளை விளக்கும் முக்கிய ஸூறா
1) ஸூறா பகறா 2) ஸூறா தௌபா
3) ஸூறா புர்க்கான் 4) ஸூறா பாத்திஹா

11. நபி (ஸல்) அவர்கள் ''தபூக்'' போருக்கு அழைப்பு விடுத்த போது யுத்தச் செலவுக்காக தமது செல்வம் அனைத்தையும் நபியின் முன் கொண்டு வந்து குவித்த ஸஹாபி
1) உமர் (ரழி) 2) உஸ்மான் (ரழி) 3) அலி (ரழி) 4) அபூபக்கர் (ரழி)

12. அன்னை சொல் தட்டாது கொள்ளைக்காரர்களிடம் உண்மை கூறி அவர்களை நல்லவர்களாக மாற்றிய அறிஞர்
1) இமாம் கஸ்ஸாலி (ரஹ்)
2) முஹ்யத்தீன் அப்துல்காதீர் ஜீலானி (ரஹ்)
3) இமாம்ஹஸனுல் பஸரி (ரஹ்)
4) இமாம் ஹாதுலி (ரஹ்)

13. உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்தில் அல்குர்ஆன் வெவ்வேறாக ஓதுவதை அவதானித்த ஸஹாபி ஒன்று சேர்க்க ஆலோசனை வழங்கினார். அந்த ஸஹாபி?
1) உமர் (ரழி) 2) ஹுதைபதுல் யமானீ (ரழி)
3) ஆபூதர் அல் கிப்பாரி (ரழி) 4) அனஸ் இப்னு மாலிக் (ரழி)

14. ஜாஹிலிய்யாக் காலத்தில் அரேபியர்களிடம் காணப்பட்ட நற்பண்புகள்
1) வாக்கு மீறாமை 2) வீரம் 3) விருந்தோம்பர் 4) யாவும் சரி

15. குறைஷியரிகளின் கொடுமைகளை சகிக்க முடியாத நபி(ஸல்) அவர்கள் தனது தோழர்களை ஹபஷாவுக்கு முதலில் ஹிஜ்ரத் அனுப்பினார்கள் ஹபஷாவின் தற்காலப் பெயர்
1) ஈராக் 2) எகிப்து 3) எதியோப்பியா 4) ஸ்பெய்ன்

16. 'முஆமலாத்' எனப்படுவது
1) வணக்கம் பற்றி விளக்கும் பகுதியாகும்.
2) விவாக சட்டதிட்டங்கள் பற்றி விளக்கும் பகுதி ஆகும்.
3) கொடுக்கல் வாங்கல் பற்றி விளக்கும் பகுதி ஆகும்.
4) விவாகத்தை மீறுவது பற்றி விளக்கும் பகுதி ஆகும்.

17. 'தொழுகை நிறைவேற்றப்பட்டுவிட்டதும் பள்ளியில் இருந்து வெளிப்பட்ட பூமியில் பரவிச் சென்று அல்லாஹ்வுடைய அருளைத் தேடிக் கொள்ளுங்கள்' எனும் கூற்று
1) அல்லாஹ்வுடையது 2) நபியவர்களுடையது
3) இமாம் மாவர்தி அவர்களுடையது 4) இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுடையது.

18. எந்த குற்றத்திற்கும் இல்லாத அளவு அல்லாஹ்வுடன் போர் செய்யும் ஒரு செயலாக அல்லாஹ் குர்ஆனில் எச்சரிக்கை செய்த பாவச் செயல்
1) விபச்சாரம் 2) வட்டி 3) திருட்டு 4) அவதூறு

19. 'அ' பகுதியில் உள்ள தகவல்களை 'ஆ' பகுதியில் உள்ள தகவல்களோடு இணைத்தால் வரும் பொருத்தமான சேர்மானத் தொகுதியை தெரிவு செய்க.

| அ | ஆ |
|---|---|
| 1. ஆதாம் (அலை) | A. நெசவு |
| 2) நூஹ் (அலை) | B. இரும்புருக்கு |
| 3) இத்ரீஸ் (அலை) | C. தச்சு |
| 4) தாவூத் (அலை) | D. விவசாயம் |

1) DACB 2) DCAB 3) CDAB 4) ACDB

20. இஸ்லாமிய பொருளியல் கோட்பாட்டின் பிரதான விடயம்
1) சொத்துக்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்குரியது
2) சொத்துக்கள் அவற்றைத் தேடிய மனிதனுக்குரியது
3) சொத்துக்கள் ஓர் சோதனை
4) கேட்டு வருவோருக்கு கொடுத்தல் கடமையாகும்

21. கற்பொழுக்கம் பேணி வாழ்வை வெற்றி கொண்ட றஸுல்
1) யூசுப் (அலை) 2) ஐயூப் (அலை) 3) முஸா (அலை) 4) ஈஸா (அலை)

22. பின்வருவோரில் தற்காலிகமஹ்ரம்களில் அடங்காதவர்
1) தந்தையின் மனைவி 2) மனைவியின் சகோதரி
3) முஷ்ரிக்கான பெண் 4) மனைவியின் தாயின் சகோதரி

23. இஸ்லாம் பலதார மணத்தை
1) கட்டாயமாக்கியுள்ளது
2) தடுத்துள்ளது
3) தேவையின் அடிப்படையில் அனுமதித்துள்ளது
4) பொருத்தமற்ற செயலாக கருதுகின்றது.

24. விவாகத்தின் போது வலி என அழைக்கபடுபவர்
1) விவாகப் பதிவாளர் 2) சாட்சியாளர்
3) மணமகனின் நண்பர் 4) மணப்பெண்ணின் பொறுப்பாளர்

25. கணவனை இழந்த கர்ப்பிணிப்பெண் இத்தா அனுஷ்டிக்க வேண்டிய காலஅளவு
1) பிள்ளைப் பேறுவரை 2) மூன்று மாதங்கள்
3) 40 நாட்கள் 4) 4 மாதமும் 10 நாட்களும்

26. 'ஸீறா' என்ற அரபுச் சொல் குறிப்பது
1) நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை வரலாறு.
2) ஸஹாபாக்களது வரலாறு.
3) தாபியீன்களது வரலாறு
4) ஏனைய நபிமார்களது வரலாறு

27. ‘‘நபியின் நகரம்’’ என அழைக்கப்பட்ட நகரம்
1) மக்கா  2) மதீனா  3) எகிப்து  4) பலஸ்தீன்.

28. ‘‘யஷ்ரிப்’’ இல் இஸ்லாத்தைப் போதிப்பதற்காக நபியவர்களால் அனுப்பிவைக்கப்பட்ட நபித்தோழர்
1) ஹி.06  2) ஹி.08  3) ஹி.10  4) ஹி.11

29. இஸ்லாமிய உலகில் முதன்முதலில் கடற்படையை உருவாக்கிய பெருமை எந்த கலீபாவிற்குரியது
1) அலி (ரழி)  2) அபூபக்கர் (ரழி)  3) உமர் (ரழி)  4) உஸ்மான் (ரழி)

30. ‘‘அல்லாஹ்வின் சிங்கம்’’ என நபி(ஸல்) அவர்களால் புகழப்பட்டவர்
1) உமர் (ரழி)  2) அபூ ஹுறைரா (ரழி)  3) அலி (ரழி)  4) உஸ்மான் (ரழி)

31. கூட்டு வியாபாரத்தைச் சுட்டும் அறபுப் பதம்
1) முஷாரகா  2) முழாரபா  3) முஹாபஹா  4) முதாரஆ

32. அறிஞர் சித்திலெப்பையின் ஆன்மீகப் பலத்துக்கு வலுவூட்டிய ஒரு பெரியார்
1) மாப்பிள்ளை லெப்பே ஆலிம்  2) ஷேக் முஸ்தபா வலியுல்லாஹ்
3) கசாவத்தை ஆலீம் அப்பா புலவர்  4) சேர்.செய்யத் அஹமத் கான்

33. ஹஜ், உம்ராவுக்கான நிய்யத் முறைகள் கீழே ‘அ’, ‘ஆ’ நிரல்களில் தரப்பட்டுள்ளன.

| | அ | | ஆ |
|---|---|---|---|
| i. | அத்தமத்துஉ | A. | ஹஜ்ஜையும் உம்ராவையும் சேர்த்து நிய்யத் வைப்பது |
| ii. | அல் - கிரான் | B. | ஹஜ்ஜை மாத்திரம் நிய்யத் வைப்பது |
| iii. | அல் - இப்ராத் | C. | ஹஜ்ஜை வேறாகவும் உம்ராவை வேறாகவும் நிய்யத் வைப்பது |

மேலே ‘ஆ’ நிரலிலுள்ளவை ‘அ’ நிரலுக்கேற்ப ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தெரிவு யாது?
1) A,C,B  2) B,A,C  3) C,A,B  4) C,B,A

34. வரையறுக்கப்பட்ட காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய நற்செயல்
1) ஸதகா  2) அகீகா  3) உழ்ஹிய்யா  4) நத்ர்

35. ‘‘நப்ஸுல் முத்மஇன்னா’’ என்பது எதனைக் குறிக்கிறது?
1) நோயுற்ற உள்ளம்  2) தீமையைத் தூண்டும் உள்ளம்
3) தன்னையே நொந்துகொள்ளும் உள்ளம்  4) திருப்தியடைந்த உள்ளம்.

36. கீழே ‘‘அ’’ நிரலில் நூலாசிரியர்கள் சிலரின் பெயர்களும் ‘‘ஆ’’ நிரலில் அவர்களால் எழுதப்பட்ட நூல்கள் சிலவற்றின் பெயர்களும் தரப்பட்டுள்ளன.

| | அ | | ஆ |
|---|---|---|---|
| i. | இமாம் மாலிக் (ரஹ்) | A. | அர் - ரிஸாலா |
| ii. | இமாம் அஹமத் (ரஹ்) | B. | முஅத்தா |
| iii. | இமாம் ஷாபிஈ (ரஹ்) | C. | அல் - பிக்ஹுல் அக்பர் |
| iv. | இமாம் அபூஹனீபா (ரஹ்) | D. | முஸ்னத் அஹ்மத் |

kalvi.lk

"ஆ" நிரலிலுள்ள நூல்களின் பெயர்கள் "அ" நிரலிலுள்ள நூலாசிரியர்களின் பெயர்களுடன் ஒழுங்குமுறையில் தொடர்புபடுத்தப்பட்டுள்ள விடை யாது?

1) A,B,D,C 2) B,C,D,A 3) B,D,A,C 4) D,B,C,A

37. தயம்முமின் உறுப்புகள் எவை?
1) முகமும் இரு கால்களும்
2) முகமும் இரு கைகளும்
3) முகமும் தலையும்
4) முகம், தலை, இரு கைகள் ஆகியன

38. எகிப்திலிருந்து இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டவர்
1) உமர் ஹஸரத்
2) காலித் பின் பகயா
3) ஒறாபி பாஷா
4) இபுனு பதூதா

39. கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் அதிபராகவும் அரசியல் பிரமுகராகவும் இருந்து நட்டுக்குப் பணியாற்றியவர்
1) சித்தி லெப்பை
2) ஐ.எல்.எம்.ஏ.அஸீஸ்
3) கல்நிதி T.B. ஜாயா
4) டபிள்யூ.எம்.அப்துர் ரஹ்மான்

40. "கழா - கத்ர்" மீது அவநம்பிக்கை கொள்பவனின் நிலை
1) பாஸிக் 2) முர்தத் 3) முனாபிக் 4) காபிர்

Education கல்வி අධ්‍යාපන

**வடமாகாண கல்வி திணைக்களம்**
**கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) முன்னோடிப் பரீட்சை 2017**

**இஸ்லாம் II**
Islam **II**

❖ **முதலாம்** வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
❖ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்

## பகுதி- II

**01). சுருக்கமான விடை தருக.**

(i). வியாபாரத்தின் அடிப்படைகள் எவை?
(ii). திருமண ஒப்பந்தம் செல்லுபடியாவதற்கு அவசியமான நிபந்தனைகள் எவை?
(iii). இஜ்மா:வின் பிரதான வகைகள் **இரண்டைக்** குறிப்பிடுக
(iv). ஜனபஸாவுக்குச் செற்ற வேண்டிய கடமைகள் **இரண்டைக்** குறிப்பிடுக?
(v). வியாபார கொடுக்கல் வாங்கலின் போது தடுக்கப்பட்ட விடயங்கள் எவை?
(vi). உஸ்மான் (ரழி) அவர்கள் "தூன்னூரைன்" என அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?
(vii). இஸ்லாத்தின் ஆரம்ப வளர்ச்சிக்கட்டத்தில் ஆன்மீகப்பயிற்சியும், இரகசியப் பிரக்சாரமும் நடைபெற்ற இடம் எது?

(viii). இஸ்லாம் அனுமதித்துள்ள வர்த்தக முயற்சிகள் **இரண்டைக்** குறிப்பிடுக?
(ix). அலி (ரலி) அவர்களிடம் காணப்பட்ட ஆளுமைப் பண்புகள் **இரண்டை** எழுதுக?
(x). தொழுகையில் ‘‘ஓதுதல்’’ மூலம் நிறைவேற்றப்படும் பர்ளுகள் **இரண்டையும்** பெயரிடுக?

(2X10=20 புள்ளிகள்)

**02)**

(i). இஸ்லாமிய அகீதாவுக்கு அடிப்படையாக அமைகின்ற மூலாதாரங்கள் இரண்டும் யாது?
(ii). இஸ்லாமிய அகீதாவின் தூய்மையைப் பாதுகாக்க பங்களிப்புச் செய்த இமாம்கள் மூவரைக் குறிப்பிடுக?
(iii). குப்ரை ஏற்படுத்தும் வழிமுறைகள் எத்தனை?
அவைகளை உதாரணத்துடன் விளக்குக?

(2+3+5=10)

**03)**

(i). நபி (ஸல்) அவர்களே இறுதிநபி என்பதை வலியுறுத்தும் நபி மொழி ஒன்று தருக?
(ii). ஷிர்க் எத்தனை வகைப்படும்?
உதாரணத்துடன் விளக்குக?
(iii). ஸுஹுபுகள் வழங்கப்பட்ட நபிமார்களையும் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஸுஹுபுகளின் எண்ணிக்கைகளையும் குறிப்பிடுக?

(2+3+5=10)

Education கல்வி අධ්‍යාපන

**04)**

(i). நபி (ஸல்) அவர்களும், ஹாஷிமிகளும் சமூகப் பகிஸ்கரிப்பிற்கு உள்ளாக்கப்பட்ட இடம் யாது?
(ii). நபி(ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட உடல் ரீதியான இம்சைகள் மூன்று தருக?
(iii). உமர் (ரழி) அவர்கள் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் ஐந்து தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

**05)**

(i). கலீபாக்களது காலத்தில் முஸ்லிம்களுக்கிடையே இடம்பெற்ற யுத்தங்கள் இரண்டு தருக?
(ii). கலீபா அபூபக்கர் (ரழி) அவர்கள் ‘‘ஸித்தீக்’’ என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?
(iii). உஸ்மான் (ரழி) அவர்கள் சமூகத்துக்கு ஆற்றிய சேவைகள் ஐந்து தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

**06)**

(i). ‘உம்மத்’ என்பதன் கருத்தை எழுதுக.

(ii). குடும்ப உறவின் மூலம் உருவாகும் மஹ்ரமீக்கள் பற்றி விளக்குக

(iii). அஜ்னபிகளுடனான கலந்துரையாடலின் போது பேண வேண்டிய ஒழுங்குமுறைகளை விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

**07)**

(i). துஆ ஒரு வணக்கம் என்பதன் மூலம் கருதப்படுவது என்ன?

(ii). ஸுபஹுத் தொழுகையின் பின் ஓதவேண்டுமென்று நபியவர்கள் கற்றுத் தந்த 3 துஆக்களை குறிப்பிடுக

(iii). தஸ்பீஹ்,தஹ்மீத்,தக்பீர் எனும் பதங்களைத் தெரிவுபடுத்துக.

(2+3+5=10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page